# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 04.06.2025

**முன்னிலை**

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் NC 2768/B/2021 (SA 497/B/2021)**

**ஆணை**

மேல்முறையீட்டாளரின் 06.09.2021 நாளிட்ட ஆணை நிறைவேற்றப்படாமை மனு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகின்றது :-

- மேல்முறையீட்டாளர் தனது ஆணை நிறைவேற்றப்படாமை குறித்த மனுவுடன் பிரிவு 6(1) / 19(1) / 19(3) -ன் கீழ் அளித்த மனுவுடன் நகல்கள் மற்றும் மாநில தகவல் ஆணையத்தின் உத்தரவு நகல் ஆகியவற்றை சமர்ப்பிக்கவில்லை. மேலும், மேல்முறையீட்டாளர் இது குறித்து மீண்டும் தகவல்கள் கோரப்படாத நிலையில் மேல்முறையீட்டாளருக்கு, பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல் திருப்தியுள்ளதாக இவ்வாணையம் கருதுகிறது. எனவே, இப்பொருள் குறித்து தகவல்கள் ஏதேனும் தேவைப்படின், மேல்முறையீட்டாளர் மீண்டும் சம்மந்தப்பட்ட பொது அதிகார அமைப்பின் பொது தகவல் அலுவலருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 -ன் படி புதிய மனுவினை தாக்கல் செய்து உரிய தகவலினை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்படும் மனுவிற்கு பொது தகவல் அலுவலர் அவர்கள் உடனடியாக உரிய தகவலை உரிய காலத்திற்குள் வழங்க உத்தரவிடப்படுகிறது.

2. தமிழ்நாடு தகவல் ஆணையம் மேல்முறையீட்டு வழிமுறை விதிகள் 2012-ல் விதி [5(1)(VII)] -ன் கீழ் ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கானது முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 2768/B/2021 (SA 497/B/2021)</u>**

**<u>பெறுநர்</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்,
இருப்பு - புதுக்கோட்டை
தூத்துக்குடி மாவட்டம்.

**<u>மனுதாரர்:</u>**

திரு.இரா.வெங்கடேஷ் பெருமாள்,
த/பெ.மு.இராமலிங்கம்,
2/15 வடக்கு தெரு,
கே.பி. தளவாய்புரம்,
தூத்துக்குடி மாவட்டம் 628 104

Copy to: File
SE/TY